தடிகைகளாக இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இதுபோன்ற நடவடிக்கைகள் இனி நிகழாமல் தமிழக அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போலீசாரும், தமிழக அரசும் சுறுசுறுப்புடன் செயல்பட்டிருக்கிறார்கள் என்றாலும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்தவரை அவற்றை விரைவுபடுத்த வேண்டும் என்று மட்டும் கேட்டு அமைகிறேன்.

3. அறிவிப்பு.

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1989-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. சட்ட முன்வடிவுகள்.

(அ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவைப், பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS